

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் கலையரங்கப் புத்தாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் சக்திபெருமாள், துணைத் தலைவர் பி. இராகவன் மற்றும் பொதுச் செயலாளர் இரா. முகுந்தன் ஆகியோரிடம் வழங்கினார்.இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கும் மேற்பட்ட 9 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 9 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். உடன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திருமதி. சு. அமிர்த ஜோதி, ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் உதவி ஆப்செட் மிஷின் டெக்னீஷியன் மற்றும் காலங்குறிப்பவர் (நிலைII) பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 19 நபர்களுக்கும், கருணை அடிப்படையில் மஸ்தூர் பணியிடத்திற்கு ஒரு நபருக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி.வெ.ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வேராஜாராமன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் சென்னை மற்றும் மதுரை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளில் குரலிசை, வயலின், தவில் மற்றும் புல்லாங்குழல் ஆகிய பிரிவுகளில் நான்கு மாற்றுத்திறனாளிகளுக்கு விரிவுரையாளர்கள் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி. கவிதா ராமு ஆகியோர் உடனிருந்தனர்.



மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரிலுள்ள எம்.ஐ.டி. பல்கலைக்கழக வளாகத்தில் தேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் மாநாடு எனும் அமைப்பின் சார்பில் பிப்ரவரி 8, 9 தேதிகளில் நடைபெற்ற Capacity Building Programme எனும் கருத்தரங்கில் கலந்துகொண்ட கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அக்கருத்தரங்கச் சான்றிதழைக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான தளபதி அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (18.2.2025) பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் அமைந்துள்ள தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் பராமரிப்பு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, தா.மோ. அன்பரசன், வி. செந்தில் பாலாஜி, மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம். கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத்தின் தலைவர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், தாம்பரம் மாநகர காவல் ஆணையாளர் திரு.அபின் தினேஷ் மோடக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலாளர் சு.பிரபாகரன். மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட

# 18 மாவட்ட விவசாயிகளுக்கு 498.80 கோடி ரூபாய் நிவாரணம்!

# 5,18,783 விவசாயிகள் பயன்பெறுவர்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, பிப்.19-

**தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் ஃபெஞ்சல் புயலின் காரணமாக வரலாறு காணாத அதிகனமழை பொழிவு ஏற்பட்டு கடலூர், விழுப்புரம், கிருஷ்ணகிரி, தருமபுரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டதோடு, வீடுகள், சாலைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பெரும் சேதமடைந்து, வேளாண் மற்றும் தோட்டக் கலைப் பயிர்களும் பாதிக்கப்பட்டது.**

தமிழ்நாடு அரசு “ஃபெஞ்சல்” புயலை“ கடுமையான இயற்கை பேரிடர்” என்று அறிவித்ததோடு, தமிழ்நாடு அரசின் வேண்டுகோளுக்கிணங்க, ஒன்றிய அரசும் பெஞ்சல் புயலை கடுமையான இயற்கை பேரிடராக அறிவித்தது.

முதலமைச்சர் அவர்கள், ஃபெஞ்சல் புயலால் பாதிப்பிற்குள்ளான மாவட்டங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்து, போர்க்கால அடிப்படையில் மேற்கொண்ட துரித மீட்பு நடவடிக்கைகளினால் ஃபெஞ்சல் புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை திரும்பியது.

ஃபெஞ்சல் புயல் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி போன்ற பல்வேறு மாவட்டங்களில் வெள்ளம் சூழ்ந்து, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளும், ஃபெஞ்சல் புயலால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு உயர்த்தப்பட்ட நிவாரணமாக 5 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் முதலமைச்சர் அவர்களால் 3.12.2024 அன்று உத்தரவிடப்பட்டு, வழங்கப்பட்டது.

மேலும், புயலால் பாதிப்பிற்குள்ளான உட்கட்டமைப்புகளை உடனடியாக சீரமைக்க பல்வேறு துறைகளுக்கு 80 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து விடுவித்தும், சீரமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின் றன.

அத்துடன், விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களை கணக்கெடுத்து, மானாவாரி பயிருக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.8,500/, நெற்பயிர் மற்றும் பாசன வசதி பெற்ற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.17,000/, நீண்டகாலப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.22,500/ நிவாரணம் என்ற அடிப்படையில் விரைந்து நிவாரணம் வழங்கிடவும் உத்தரவிட்டார்.

அதன்படி, ஃபெஞ்சல் புயலால் சேதமடைந்த பயிர்கள் குறித்து முறையாக கணக்கெடுக்கப் பட்டு, விழுப்பு ரம், கடலூர், கள்ளக்குறிச்சி, அரியலூர், செங்கல்பட்டு, தருமபுரி, காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நாமக்கல், இராணிப்பேட்டை உள்ளிட்ட 18 மாவட்டங்களில் பாதிப்பிற்குள்ளான 3.23 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு மொத்தம் 5,18,783 விவசாயிகள் பயனடையும் வகையில் 498.80 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கிட முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ஓரிரு நாட்களில் வரவு வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ மாபெரும் கவன ஈர்ப்புப் போராட்டம்!

## பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கோலமிட்டு வெளிப்படுத்தினர்!




*சென்னை,பிப்.19-*

*”தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பாசிச பாஜக அரசைக் கண்டித்து சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?’ ‘StopHindiImposition’ என அனைவரின் இல்லங்களிலும் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம்” நடைபெற்றது.*

*தமிழ்நாட்டு மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிதியினை வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சென்னை மண்டல தகவல் தொழில்நுட்ப அணியினர் “தமிழ்நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று தங்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.*

*தமிழ்நாட்டையும், தமிழ் மக்களையும் பல்வேறு வகையில் தொடர்ந்து வஞ்சித்துக் கொண்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசு “மும்மொழிக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி கிடையாது” என்று blackmail செய்யும் தடித்தனத்தைக் கண்டிக்கின்ற வகையில்,*

*பாசிச சக்திகளின் இந்தித் திணிப்பையும், மும்மொழிக் கொள்கை என்ற மாறு வேட சொல்லாடலையும் எந்த நிலையிலும் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ளாது என்ற திராவிட மாடல் அரசின் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர்; கழகத் தலைவர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர்; இளம் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாண்புமிகு கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா ஆலோசனையின் பேரில், ஒன்றிய அரசுக்கு தங்களது கடும் கண்டனத்தை பதிவு செய்யும் வகையில், தகவல் தொழில் நுட்ப அணியின் மாநில துணைச்செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான சி.எச். சேகர் முன்னெடுப்பில் சென்னை, திருவள்ளூர் கழக மாவட்டங்களைச் சேர்ந்த தகவல் தொழில் நுட்ப அணியினர் அனைவரின் இல்லங்களிலும் ‘தமிழ்நாட்டின் நிதி எங்கே?” மற்றும் “StopHindiImposition” என்று வாசலில் கோலமிட்டு ஒன்றிய அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.*

*மேலும், அதனை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து அனைவரும் சமூக வலைதளங்களில் பகிர்ந்து கொண்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. மேலும், “StopHindiImposition” மற்றும் “ChennaiZone DMKIT wing” ஹேஷ் டேக்குகள் X தளத்தில் ட்ரெண்டிங்கில் முதன்மை இடத்தை வகித்தது குறிப்பிடத்தக்கது.*